# தமிழி

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

செய்திமலர்

திசம்பர் 2020 - சூன் 2021





மாண்புமிகு முதலமைச்சர்
மு. க. ஸ்டாலின் அவர்கள்
தலைமையில் பொறுப்பேற்றுள்ள
தமிழ்நாட்டின் புதிய அரசுக்குத்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
வாழ்த்துகளைத்
தெரிவித்துக்கொள்கிறது.



தமிழ்நாட்டு அரசின் மாண்புமிகு
தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சராகப்
பொறுப்பேற்றுள்ள தங்கம் தென்னரசு
அவர்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்
துணைவேந்தர், மரியாதை நிமித்தமாக
08. 05. 2021 அன்று
சந்தித்து வாழ்த்துக் கூறினார்.

# தமிழி

**தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர்**

**திசம்பர் 2020 - சூன் 2021**

பதிப்பாசிரியர்
பேராசிரியர் கோ.பாலசுப்ரமணியன்
துணைவேந்தர்

பொறுப்பாசிரியர்கள்
முனைவர் தெ.வெற்றிச்செல்வன்
உதவிப் பேராசிரியர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை

முனைவர் மா.அறிவானந்தன்
உதவிப் பேராசிரியர்
சமூகஅறிவியல் துறை

ஒளிப்படங்கள்
கேள்வி - காட்சி மையம்

தரவாக்கம்
மக்கள் தொடர்புப் பிரிவு

மலரழகு
மு.திருநாவுக்கரசு

வெளியீடு
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மின்னஞ்சல்
thamizhitu@gmail.com
இணையதளம்
www.tamiluniversity.ac.in


## தலையங்கம்

'உண்டாலம்ம இவ்வுலகு' என்கிறது, சங்க இலக்கியம். இக்கொடுங்காலத்திலும் மனிதகுலம் காக்கும் பணியில் தங்களைக் கரைத்துக் கொண்ட அத்தனை முன்களப் பணியாளர்களையும் நன்றியோடு நினைத்திருப்போம். இப்படிப்பட்ட நல்லவர்களால் தான் இவ்வுலகம் நின்று நிலைத்து நீடித்திருக்கிறது. இதைத்தான், சங்கத்தமிழும் சொல்கிறது.

கொரோனா நச்சுயிர்க் காலத்தில் பல்கலைக்கழகம் செயல்பட முடியாத காலத்திலும் கல்வியாளர்கள் வீட்டிலிருந்தபடியே ஆய்வுத் திட்டப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அடுத்தடுத்த மாதங்களில் அத்தகைய ஆய்வுத்திட்டங்கள் முடித்தளிக்கப் படவுள்ளன. அலையலையாக வந்து தாக்கும் நச்சுக்காலம் சற்றே மாறிக்கொண்டிருப்பதை உணரத்தொடங்கியுள்ளோம். அலைகள் ஓயட்டும். இயல்புநிலை திரும்பட்டும்.

இணையவழி வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் என, பல்கலைக்கழகச் செயன்மைகள் இந்தத் 'தமிழி' இதழை அலங்கரிக்கின்றன. எத்தகு சூழலிலும் எக்காலத்திலும் நமது பல்கலைக்கழகச் செயல்பாடுகள் தொய்வின்றித் தொடர்கின்றன. இனியும் தொடரவேண்டும். தொடரும் என நம்புவோம். பணிகளில் பங்களித்த அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

வாழ்க தமிழ். வளர்க தமிழ்ப் பல்கலைக்கழகம்.

முனைவர் கோ.பாலசுப்ரமணியன்

# இலக்கியத்துறை அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறை சார்பாக, 17-02-2021 அன்று மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா அறக்கட்டளை, ஔவைத் தமிழ் அறக்கட்டளை, மேஜர் கதிர்மகாதேவன் அறக்கட்டளை ஆகிய அறக்கட்டளைகள் சார்பாக, சொற்பொழிவுகள் நடைபெற்றன. மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா. காமராசு தலைமையுரை ஆற்றினார். இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் பெ. இளையாப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்.

முற்பகல் நிகழ்வில், ‘இருபதில் ஒருபதில்’ எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறைத் தலைவர் முனைவர் ய.மணிகண்டன் சிறப்புப் பொழிவாற்றினார். பாரதியியல் சார்ந்த ஆழமான புலமையை வளர்த்துக்கொள்ள முனையவேண்டும் என்றார். பாரதி படைப்புகளின் பதிப்பில் நிகழ்ந்த மாறுபாடுகளைச் சான்றுகாட்டியும், பரலி சு. நெல்லையப்பர் பாடல், பாரதியார் பாடலாக பதிப்பு பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டி, காலச்சுவடு இதழில் தாம் எழுதிய கட்டுரை வந்திருப்பதை மேற்கோள் காட்டியும் பேசினார். நிறைவாக இலக்கியத்துறைப் பேராசிரியர் ஜெ. தேவி நன்றியுரையாற்றினார்.

பிற்பகல் நிகழ்வில், நாவலர் ந. மு. வேங்கடசாமி திருவருள் கல்லூரிச் செயலரும் முதுபெரும் பேராசிரியரும் ஆகிய முனைவர் இரா. கலியபெருமாள் காலம்தோறும் ஔவைகள் தமிழ்ச்சமூகத்தில் புலமைத்துவத்தோடு பங்களித்ததைத் திறம்பட எடுத்துரைத்தார். சங்கஇலக்கிய ஔவையின் பொருண்மைச் சிறப்பையும் புலப்பாட்டுச் சிறப்பையும் விரித்துரைத்தார். தேசியக்கல்லூரி உதவிப்பேராசிரியர் ச. நீலகண்டன் கம்பனும் வால்மீகியும் எனும் தலைப்பில் பொழிவாற்றினார். நிறைவாக, இலக்கியத் துறை உதவிப்பேராசிரியர், இரா. தனலெட்சுமி நன்றியுரையாற்றினார்.






# தமிழ்ப் பல்கலைக்கழக விடுதிகளில் நடைமுறைக்கு வந்தது உணவுப் பங்கீட்டு முறை

தமிழ்ப் பல்கலைக்கழக ஆடவர் மற்றும் மகளிர் விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் முனைவர் பட்ட, ஆய்வியல் நிறைஞர், கல்வியியல், முதுநிலைப் பட்ட மாணவ மாணவியருக்கு, முதல் முறையாக உணவுப் பங்கீட்டு முறையில் உணவினைத் தயார் செய்து வழங்கும் முறை அமல்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. உணவு வழங்கும் முறையைத் தொடங்கிவைத்து துணைவேந்தர், விடுதிகளில் பங்கீட்டு முறையில் உணவினைத் தயார்செய்து வழங்கும்பொழுது, மாணவர்கள் தங்களது உணவுக்காகச் செலவிடும் தொகை குறைவடையும். மாணவர்களே உணவுக் குழுவை அமைத்துக் கொண்டு, தங்களுக்குப் பிடித்த, சுவையான உணவு வகைகளைச் சமையல் செய்து வழங்கும் பொழுது உணவும் சுகாதாரமும் பேணிப் பாதுகாக்கப்படும். உணவு வீணாவதும் தவிர்க்கப்படும். பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் மிகுதியாக தங்கிப் பயிலும் விடுதிகளில் இத்தகைய உணவுப் பங்கீட்டு முறை மிகவும் பயனுள்ளதாக அமையும், என்றார். இந்த விழாவில் ஆடவர் இல்லக் காப்பாளர் முனைவர் இரா. சு. முருகன், இல்லத் துணைக் காப்பாளர், முனைவர் எம்.ஏ. சிவராமன், மகளிர் இல்லக் காப்பாளர் முனைவர் ச.கவிதா, இல்லத் துணைக் காப்பாளர், மருத்துவர் மண்டேலா, புல விருந்தகக் காப்பாளர் வ. வசந்தராஜா மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டனர்.



# புத்தக வாசிப்பால்தான் புலர்கிறது மனித வாழ்வு

தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், படித்துறை புத்தக அறக்கட்டளை ஆகியனவற்றின் சார்பில், ஜனவரி 30 ஆம் தேதி, பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில், ஆவணப்பட இயக்குநரும் எழுத்தாளருமான பாரதிகிருஷ்ணகுமார் சிறப்புரையாற்றினார். ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது, ஏழுகடல் ஆர்ப்பரிக்கும் ஓசை கேட்கிறது. அதனால்தான் உரையாசிரியர்கள் உருவாகின்றனர். புதிய புதிய உரையாசிரியர்கள் புதிய புதிய ஆக்கங்களைத் தந்து வருகிறார்கள். புதிய புதிய உரை ஆசிரியர்களைத் தந்து வருகிறார், வள்ளுவர். 25 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டாடப்பட்ட, எவ்வளவோ நூல்கள் இப்போது பட்டியலில் இல்லை. ஆனால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறள் நம் காலத்திலும் வாசிக்கப்படுகிறது. வள்ளுவனுக்கு உரையாசிரியர்கள் தொடர்ந்து இருந்து வருவதே அதற்குக் காரணம். மனிதகுலம் இப்போதும் தழைத்திருப்பதற்குப் புத்தகங்கள்தான் காரணம். இறந்தகாலம் என்கிற இருண்ட விழிக்குள் எதிர்காலம் என்கிற வெளிச்சத்துக்கு அழைத்துச் செல்பவை, புத்தகங்களே. புத்தகங்கள் இல்லா விட்டால் சாக்ரடீசை நாம் பார்த்திருக்கமுடியாது. எல்லாவற்றையும் புத்தகங்கள் வழியாகத்தான் நாம் பார்க்கமுடிகிறது. புத்தகங்களால்தான் மனித வாழ்வு புலர்கிறது. எனவே, சமூகத்தை வாசிக்கச் செய்ய வேண்டும். வாசிக்காத சமூகம் இயற்கையைச் சீரழித்துவிடும். எல்லாவித கயமைத்தனமும் அரங்கேறும். ஆனால், இந்தத் தலைமுறையினரிடம் வாசிக்கும் பழக்கம் இல்லை அலைப்பேசி வந்து விட்ட பிறகு யாரும் யாருடனும் பேசுவதில்லை. எனவே எல்லாரையும் வாசிக்கச் செய்யவேண்டும். தமிழ்நாட்டில் இதை ஓர் இயக்கமாகக் கொண்டு செல்ல வேண்டும் என்றார், பாரதி கிருஷ்ணகுமார். தலைமையேற்ற தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர், புத்தகங்களால் புலரும் வாழ்வு என்ற நூலை வெளியிட்டார். அதன் முதல்படியை சென்னை கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர், முனைவர் சு.சதாசிவம் பெற்றுக்

கொண்டார். சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுகளை, துணைவேந்தர் வழங்கினார். 'படித்து முடிக்க முடியாத புத்தகம்' என்ற கட்டுரைக்காக, பாரதி கிருஷ்ணகுமார் முதல் பரிசாக ரூபாய் 10,000மும், 'கதை விளக்கேந்திய காரிகை' என்ற கட்டுரைக்காக கவிஞர் ஸ்டாலின் சரவணனுக்கு இரண்டாம் பரிசாக ரூபாய் 7000மும், 'நிரபராதிகளின் காலம் - வாழ்க்கை மீதான விசாரணை' என்ற கட்டுரைக்காக புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பா.ரவிக்குமாருக்கு மூன்றாம் பரிசாக ரூபாய் 5000மும் வழங்கப்பட்டன. திரைப்பட இயக்குனர் ராசி அழகப்பன், எழுத்தாளர் லா.ச.ரா.சப்தரிஷி, படித்துறைப் புத்தக அறக்கட்டளைத் தலைவர் இளம்பரிதி, அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைப் பேராசிரியர் தலைவர் இரா. குறிஞ்சிவேந்தன், ஆகியோர் பேசினர். அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஞா. பழனிவேலு வரவேற்க, அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் தெ. வெற்றிச்செல்வன் நன்றியுரைத்தார்.

# தமிழர் திருநாள் தைப்பொங்கல் விழா

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 13-01-2021 அன்று, தமிழர் திருநாள் தைப்பொங்கல் விழா, துணைவேந்தர் தலைமையில் அரசு வழிகாட்டுதலின்படி, தனிமனித இடைவெளியைப் பின்பற்றி, எளியமுறையில் கொண்டாடப்பட்டது. பொங்கல் விழா நிகழ்ச்சியில், பதிவாளர்(பொ) முனைவர் கு. சின்னப்பன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நிதி அலுவலர், துணைப்பதிவாளர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் நிறைவில், துணைவேந்தர் அனைவருக்கும் பொங்கல் வழங்கி, வாழ்த்துக் கூறினார்.



# புலம்பெயர்ந்த தமிழர்களுக்காக மேடைத் தமிழ் பயிற்சிப் படிப்பு அறிமுகம்

அயல்நாடுகளிலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் வாழும் தமிழ் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மேடைத் தமிழில் பேசுதல் குறித்த புதிய பயிற்சிப் படிப்பு தொடங்கப்பட உள்ளது என்றார், பல்கலைக் கழகத் துணைவேந்தர். ‘வணக்கம் மலேசியா’ ஊடக நிறுவனத்தின் ஏற்பாட்டில், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் செயல்பட்டுவரும் தமிழ் வளர் மையத்தின் ஒருங்கிணைப்பில், பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கும் பல்கலைக்கழக மாணவ மாணவியருக்கும் தனித்தனியே பன்னாட்டுப் பேச்சுப்போட்டிகள் இணையவழியில் நடை பெற்றன. 21-12-2020 அன்று நடைபெற்ற இறுதிச் சுற்றுப் போட்டியின் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்கினார், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ்க் கல்வி அளிக்கும் முயற்சிகள் ஒருபுறம் நடைபெற்று வருகின்றன. அதேவேளையில் ஒருமுறை உயிர்ப்புடன் தலைமுறைகளைக் கடந்து வாழ வேண்டுமென்றால் மொழி, பேச்சு வழக்கில் பயன்படுத்தப்பட வேண்டும். நல்ல மேடைப்பேச்சு, பலருக்கும் அன்றாட வாழ்வில் மொழியைப் பயன்படுத்துவதற்கு உந்துதலாக அமையும். மேடைத்தமிழை ஆற்றலுடன் வெளிப்படுத்த, பல நுணுக்கங்கள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு மேடையில் பேசும் கலையைப் பயிற்றுவிக்கும் பயிற்சியைத் தொடங்க, முடிவெடுத்துள்ளோம். இணையதளம் வாயிலாக நடத்தப்படவுள்ள இப்படிப்புக்கான பயிற்சிகளை, சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களைக் கொண்டு, செய்முறை நிலையில் வழங்க உள்ளோம். சான்றிதழ் நிலை அளவிலான படிப்புக்கான பாடத்திட்டங்கள், துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு வடிவமைக் கப்படும். தமிழ் வளர் மைய ஒத்துழைப்புடன் இப்பயிற்சி, தமிழர்கள் வாழும் நாடுகளிலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அறிமுகப் படுத்தப்படும். இதன் மூலம், தமிழை வீட்டிலும் பொதுவெளியிலும் பேசுவோரின் எண்ணிக்கை, வெளிநாடுகளிலும் இந்தியாவின் பிற மாநிலங் களிலும் கணிசமாக அதிகரிக்கும் என்றார், துணைவேந்தர்.

## தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவுநர் சிலைக்கு மரியாதை

தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவுநரும் தமிழக முன்னாள் முதல்வருமான எம்.ஜி.ஆர் சிலைக்கு 24-12-2020 அன்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் கல்வியாளர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்துகொண்டனர்.





# உ. வே. சா. பிறந்தநாள் நிகழ்வு

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகம் சார்பில் உ.வே.சா. பிறந்தநாளை முன்னிட்டு, சுவடிப்புலத் தலைவர் பேராசிரியர் பா. ஜெயக்குமார், ஓலைச்சுவடித் துறைத்தலைவர் பேராசிரியர் மோ.கோ கோவைமணி, மொழிப்புலத் தலைவர் பேராசிரியர் இரா. காமராசு, அறிவியல்புலத் தலைவர் பேராசிரியர் க. சங்கர் உள்ளிட்டோர், உ.வே.சா நினைவு இல்லத்தில் 19.01.2021 அன்று அவரது உருவச்சிலைக்கு மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்.

# தமிழி வாழ்த்துகிறது...

தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவையில் இருந்து ஆட்சிக் குழுவுக்கு, மைசூர் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன ஆய்வறிஞர், முனைவர் க. பசும்பொன் அவர்களும், பூண்டி திருப்புட்பம் கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் க. மனோகரன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தமிழ்ப்பல்கலைக்கழக வளர்தமிழ்ப்புலத்தலைவர், முனைவர் கு. சின்னப்பன் 30-06-2021 முதல் ஆட்சிக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். பணிசிறக்கத் தமிழி வாழ்த்துகிறது.



முனைவர் க.பசும்பொன்



முனைவர் க. மனோகரன்



முனைவர் கு.சின்னப்பன்

# இலக்கியத்துறை உமறுப்புலவர் அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறை சார்பாக, உமறுப்புலவர் அறக்கட்டளைச் சிறப்புச்சொற்பொழிவு 23.02.2021 அன்று நடைபெற்றது. மொழிப்புலத் தலைவர் முனைவர் இரா. காமராசு தலைமையுரை ஆற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக வருகைதரு இலக்கிய ஆளுமையும் சிறந்த எழுத்தாளரும் ஆகிய கீரனூர் ஜாகீர்ராஜா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உமறுப்புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு, சித்தி ஜுனைதா பேகம், இன்குலாப், தோப்பில் முகமது மீரான், கீரனூர் ஜாகீர்ராஜா, ஹெச் ஹாமீம் முஸ்தபா, ஹெச். சி. ரசூல், மீரான் மைதீன், எஸ். அர்ஷியா என நீளும் தமிழ் இஸ்லாமியப் படைப்பாளி களின் கலை இலக்கியப் பங்களிப்பை, தருக்க நியாயங்களோடு முன்வைத்து விரிவான உரையாற்றினார். முன்னதாக இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் பெ. இளையாப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த, துறையின் உதவிப் பேராசிரியர் தனலெட்சுமி நன்றியுரை ஆற்றினார்.



# நாட்டுப்புறவியல்துறை அறக்கட்டளைச் சொற்பொழிவு



தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையில், முனைவர் சு. சக்திவேல் அறக்கட்டளைச் சொற்பொழிவு 24- 02- 2021 முற்பகல் சுவடிப் புலக்கருத்தரங்க கூடத்தில் நடைபெற்றது. மொழிப்புலத் தலைவர் முனைவர் இரா. காமராசு தலைமை வகித்தார். நாட்டுப்புறக் கலைஞர் வளப்பக்குடி வீரசங்கர் 'நாட்டுப்புறப் பாட்டுப் பயணம்' என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். நாட்டுப்புறப்பாடல்கள் மக்களின் உயிரில் கலந்து பிறப்பவை. மனிதவாழ்வை மெருகுடன் சித்திரிப்பவை. பிறப்பு முதல் இறப்பு வரை மனித நிகழ்வுகள் நாட்டுப்புறப் பாடல்களாக மலர்கின்றன. இன்று திரை இசையில் நாட்டுப்புறப் பாடல் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டது. மக்களை நல்வழிப்படுத்த நிச்சயமாக நாட்டுப்புறப் பாடல்களால் முடியும். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் நாட்டுப்புறக் கலைநிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என்றார் அவர். பாட்டு இடையிட்ட உரையாக அவர் பொழிவு அமைந்திருந்தது, எல்லோரையும் கவர்ந்தது. நாட்டுப்புறவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சீ. இளையராஜா வரவேற்புரை ஆற்ற, உதவிப்பேராசிரியர் முனைவர் மாலதி நன்றி உரையாற்றினார். திரு சு. தினேஷ் குழுவினரின் கரகாட்டம் நடைபெற்றது. நிகழ்வில், நாட்டுப் புறவியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் பயிலும் மாணவர்களுக்கு, திரு கணபதி ஐயர் - இராஜம் கணபதி அறக்கட்டளை சார்பில் நூல்கள் வழங்கப் பட்டன. நிகழ்வினை முனைவர் பட்ட ஆய்வாளர் செல்வகணபதி, தொகுத்து வழங்கினார்.

# உலகத் தாய்மொழி நாள்

## மொழிக்கலப்பின்றி நல்லதமிழில் பேசுவோம் துணைவேந்தர் பேச்சு!




பிப்ரவரி 22, திங்கட்கிழமையன்று, பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற, உலகத் தாய்மொழிநாள் விழாவுக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமைவகித்துப் பேசியதாவது: உலக அளவில் இலக்கிய வளமும் நீண்ட மரபும் பெற்ற மொழிகள், எழுத்துவடிவம் பெறாத மொழிகள், சைகை மொழிகள் ஆகியவை உள்ளன. இவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில்தான் 1999 - ஆம் ஆண்டு ஐ. நா. சபை, உலகத் தாய்மொழி நாள் என அறிவித்தது. மதச்சிறுபான்மை போல மொழிச்சிறுபான்மைப் பட்டியல் அண்மையில் தொகுக்கப்பட்டுள்ளது. மக்கள் பேசும் பல மொழிகளுக்கு எழுத்துவடிவம் கிடையாது. இது போன்ற மொழிகளைக் கல்வியிலும் சமூகத்திலும் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதுதான், நிகழாண்டு உலகத் தாய்மொழி நாளின் கருப்பொருளாக ஐ. நா. சபை அறிவித்துள்ளது. அழிந்துவரும் மொழிப் பட்டியலில் மலைவாழ் மக்களின் மொழிகள் இடம் பெற்றுள்ளன. அம்மொழியைப் பேசினால் இழிவாகக் கருதப்படும் என்ற மனப்பான்மையே இதற்குக் காரணம். மொழி பாதுகாக்கப்படவில்லை என்றால் பண்பாடு அழிந்துவிடும். இதனால் அவர்களது மொழியின் கரு மூலம் தெரியாமல் போய்விடுகிறது. எனவே, பிறமொழி பேசுபவர்களை ஏளனப்படுத்தாமல் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். மேலும், மாணவர்கள் மொழிக் கலப்பின்றி இயன்ற அளவுக்குத் தமிழில் பேச வேண்டும். ஆங்கிலத்தில் கலந்து பேசினால்தான், நமக்கு மதிப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும். ஆங்கிலக் கலப்பைத் தவிர்க்க வேண்டும் என்றார், துணைவேந்தர். அயர்லாந்து கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜான் ரிச்சர்ட் என்கிற தமிழ் மைந்தன் தயாரித்த, தமிழே உயிர் மொழி என்ற தமிழ்ப் புகழ்ச்சிப் பாடலைத் துணைவேந்தர் வெளியிட்டார். அதைப் பெற்றுக் கொண்ட, திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழக, ஆங்கிலத்துறை முன்னாள் தலைவர், தங்க. ஜெயராமன் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர், முனைவர் கு. சின்னப்பன் மொழிப்புலத் தலைவர், முனைவர் இரா. காமராசு ஆகியோர் வாழ்த்துரையாற்ற, இலக்கியத்துறைத் தலைவர், முனைவர் பெ. இளையாப்பிள்ளை வரவேற்றார். நிறைவாக மெய்யியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கோ. ப. நல்லசிவம் நன்றி கூறினார்.

# மெய்யியல்துறை அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல்துறை சார்பாக, முதுமுனைவர் தி. ந. இராமச்சந்திரன் சைவசமய அறக்கட்டளைச் சொற்பொழிவு 16-02-2020 அன்று சுவடிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. மெய்யியல்துறைத்தலைவர், முனைவர் பி. பாலச்சந்திரன் வரவேற்புரையாற்ற, மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா. காமராசு தலைமையுரையாற்றினார். மயிலாடுதுறைத் தருமையாதீனப் பேராசிரியர் முனைவர் மு. சிவச்சந்திரன், ‘திருமந்திரத்தில் தனிமனித ஒழுக்கம்’ என்ற பொருண்மையில் பொழிவாற்றினர். மெய்யியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கோ. ப. நல்லசிவம், நன்றியுரையாற்றினார்.



## சேதுராமன் கிருஷ்ணசாமி, சரவண ஆறுமுக முதலியார், க. பொ. இரத்தினம், திருமுருக கிருபானந்த வாரியார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சார்பாக, சேதுராமன் கிருஷ்ணசாமி, சரவண ஆறுமுக முதலியார், க. பொ. இரத்தினம், திருமுருக கிருபானந்த வாரியார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் 19-02-2020 வெள்ளிக்கிழமை அன்று சுவடிப்புல கருத்தரங்க அறையில் நடைபெற்றன. மெய்யியல் துறைத்தலைவர் முனைவர் பி. பாலச்சந்திரன் வரவேற்புரை ஆற்ற, மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா. காமராசு தலைமையுரையாற்றினார். மதுரை, செந்தமிழ்க் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் மு.செந்தில்குமார், ‘சைவசித்தாந்தத்தில் பண்பாட்டுக்கூறுகள்’ என்ற பொருளிலும், திருவாவடுதுறை ஆதீன, சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி தஞ்சாவூர் மைய, சைவ சித்தாந்தப் பேராசிரியர் முனைவர் வீ. ஜெயபால், ‘பன்னிரு திருமுறையில் வாழ்வியல்’ என்ற பொருளிலும் பொழிவாற்றினர். மெய்யியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் போ. சுரேஷ், நன்றியுரையாற்றினார்.

# குடியரசு நாள் விழா

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 26.01.2021 அன்று, 72 - ஆவது குடியரசு நாள் விழா நடைபெற்றது. தேசியக்கொடியை ஏற்றிவைத்துத் துணைவேந்தர் அவர்கள் பேசியதாவது: தமிழ்மொழி, பண்பாடு, தமிழ்வரலாறு, ஆகியவை குறித்துப் பல்வேறு ஆய்வுகளை முன்னெடுத்துப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியை அடுத்த நிலைக்கு உயர்த்துவது, நம் கடமை. தமிழ்நாட்டு அரசின் நிதியிலிருந்து, கல்வியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆய்வு நிதியைப் பயன்படுத்தி, நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன. இணையவழி வானொலிச் சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன. நீண்ட காத்திருப்பில் உள்ள புதிய நூல்கள் மறுபதிப்பு மூலம் விரைவில் வெளிவர இருக்கின்றன. ஊரடங்கு காலத்திலும் தொய்வில்லாமல் சில முக்கியமான பணிகளைச் செய்துள்ளோம். தமிழகக் கல்வி நிலையங்களிலேயே முதன்முதலாக ஓர் இணைய வழி உரைத்தொடரினை முன்னெடுத்துச் சிறந்த ஆளுமைகளைக் கொண்டு 25 உரைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இணைய வழியாகப் பல கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்பட்டன. முதுநிலை மற்றும் இளநிலைப் படிப்புகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்க்கை நடை பெற்றுள்ளது. கொரோனா நச்சுத்தொற்று காரணமாகத் தள்ளிப்போன முனைவர் பட்டச் சேர்க்கைக்கான நுழைவுத்தேர்வு, பிப்ரவரி 28 -ஆம் தேதி நடைபெற உள்ளது என்றார், துணைவேந்தர். அனைவருக்கும் இனிப்பும் வாழ்த்தும் பரிமாறப்பட்டன.





# ஆட்சிப்பணி அலுவலர்களுக்குச் சிறப்புத் தமிழ்ப் பயிற்சி

இந்திய ஆட்சிப் பணியில், 2019 - ஆம் ஆண்டில் பணி நியமனம்பெற்று, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் உதவி ஆட்சியர்கள் ஒன்பதின்மருக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளியும் தமிழக அரசின் பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் துறையும் இணைந்து, மார்ச் 2 - ஆம் தேதி முதல் 14 -ஆம் தேதி வரை சிறப்புத் தமிழ்ப் பயிற்சியை வழங்கின.

கேரளம், மகாராஷ்டிரம், பீகார், உத்தரப்பிரதேசம் உள்பட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த, இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் தமிழில் பேசவும் எழுதவும் வாசிப்பதற்குமான மொழிப் பயிற்சி பெற்றனர். அவர்களுக்கு உதவும் வகையில், இப்பயிற்சியில் அடிப்படை இலக்கணம், எழுத்துப் பயிற்சி, எடுத்துக்கூறல், மொழிபெயர்ப்பு, கையெழுத்துப் படியை வாசிக்கும் பயிற்சி, உரையாடல், குறிப்புகள் எடுத்தல், சொற்களை அமைத்தல், ஆட்சியியல் கலைச் சொற்கள், கட்டுரைகள் எழுதுதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கற்றல் கற்பித்தலில் அனுபவமிக்க மூத்த பேராசிரியர்கள் முனைவர் கி. அரங்கன், முனைவர் ஆ. கார்த்திகேயன், முனைவர் லி. ராமமூர்த்தி, முனைவர் க. இரவிசங்கர், முனைவர் இரா. முரளிதரன், முனைவர் அ. காமாட்சி ஆகியோர் சிறப்புத் தமிழ்ப் பயிற்சி அளித்தனர். பயிற்சி இயக்குநரும் இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளியின் தலைவருமான பேரா.ச. கவிதா ஒருங்கிணைத்தார்.




# உலக மகளிர்நாள் விழா

## பெண்ணுரிமைக்காக முதன்முதலில் எழுதியவர் மகாகவி பாரதி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்ச் 8 அன்று நடைபெற்ற மகளிர் நாள் விழாவில் கவிஞர் இளம்பிறை கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தாய்வழிச் சமூகமாக இருந்து வந்தபோது, உழவுத் தொழிலைக் கண்டுபிடித்ததே பெண்கள்தான் எனச் சான்றுகள் கூறுகின்றன. உழவு செய்வது மட்டுமல்லாமல் உணவுக்கு ஆதாரமாக இருந்தவர்கள் பெண்களே, என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால், புராணங்களிலும் இதிகாசங்களிலும் பெண்களின் நிலை மிக மோசமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. பெண்களை மனுஷியாகப் பார்க்கவில்லை. வெகுண்டெழும் பெண்கள் அரக்கி, பேய் எனக் கூறப்பட்டுள்ளனர். இதற்கு உதாரணமாக இராமாயணத்தில் தாடகை உள்ளிட்டோரைக் குறிப்பிடலாம். காப்பியங் களிலும் நாயகிகள் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்டப்பட்டுள்ளனர். அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாகக் காட்டப்படவில்லை. தாய்நாடு தாய்மொழி என நதிகளுக்குப் பெண் பெயர் எனக் கூறப்பட்டாலும், எந்தவித அச்சமும் இல்லாமல் பகலில்கூட பெண்களால் நடந்து செல்லமுடியாத நிலையே இன்றும் நிலவுகிறது. அரசியலிலும் பெண்களின் விழுக்காடு குறைவாகவே இருக்கிறது. இந்த விழுக்காட்டை அடைய நாம் எவ்வளவு போராட்டங்களை நடத்தினோம் என்பதைப் பெண்கள் அறிய வேண்டும். பாரதிதான் முதன்முதலில் பெண்ணுரிமைக்காக எழுதினார். அதன்பிறகு, பெண்களுக்காகப் பெரியார் நிறைய எழுதிவந்தார். எனவே, இவ்விருவரையும் இந்த மகளிர் தினத்தில் பெண்கள் நினைத்துப்பார்க்க வேண்டும். தற்காலத்தில் தொலைக்காட்சிகளில் மகளிர் தினத்தன்று நகைச்சுவைப் பட்டிமன்றம் விவாதம் என்ற பெயரில் வியாபாரம் நடத்தப்படுகிறது. பெண்ணினம் என்பது ஆணுக்கு எதிரானதல்ல. நாம் அடைந்த மாற்றங்கள் ஒட்டுமொத்தமாக அடையப் படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படுகிறது. பெண்கள் எல்லாவற்றிலும் பார்வையாளராக மட்டும் இல்லாமல், அதில் பங்கேற்பாளர்கள் ஆக மாறவேண்டும். தொழில் நுட்ப ரீதியிலும் பெண்கள் தங்களை வளர்த்துக் கொண்டால் தன்னம்பிக்கை உருவாகும் என்றார், இளம்பிறை. விழாவுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமை வகித்தார். பதிவாளர் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் வே. லதா வரவேற்க, முனைவர் இரா. இந்து நன்றியுரைத்தார். உதவிப்பதிவாளர் திருமதி இரா. கலாவதி தொகுப்புரையாற்றினார்.

# இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி அறக்கட்டளைப் பொழிவுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக, இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி சார்பாக, பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், பேராசிரியர் செ. வை. சண்முகனார், பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியார் ஆகியோரது பெயரிலான அறக் கட்டளைப் பொழிவுகள் மார்ச் 13 -ஆம் தேதி மொழிப்புல அவையத்தில் நடைபெற்றன. நிகழ்வுக்கு மொழிப்புலத் தலைவர் முனைவர் இரா. காமராசு தலைமைதாங்கினார். இந்திய மொழிகள் பள்ளியின் துறைத்தலைவர், முனைவர் ச. கவிதா வரவேற்புரையாற்ற, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன மொழிப்புல மேனாள் பேராசிரியர் முனைவர் க. இரவிசங்கர் 'தொல்காப்பியம் ஒலியனியல்' என்கிற தலைப்பிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரி, தமிழ் உயராய்வு மையப் பேராசிரியர் முனைவர் ஹென்றி ஜூலியஸ் 'செ. வை. சண்முகனார் ஆய்வுகள்' என்ற பொருண்மையிலும் சிறப்புரையாற்றினர். இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி இணைப் பேராசிரியர் முனைவர் இரா. வெங்கடேசன் நன்றியுரையாற்றினார்.

செய்திக்குறிப்பு... செய்திக்குறிப்பு... செய்திக்குறிப்பு...

## தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பில் ரூ.5.88 இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு வழங்கல்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணியாளர்கள் சார்பாக, கொரோனா தொற்றுத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைக்காக சூன் மாத ஊதியத்தில் இருந்து, ஒரு நாள் ஊதியமான ரு. 5 லட்சத்து 88 ஆயிரத்து 730 - ஐ தமிழக அரசின், முதல் அமைச்சர் பொதுநிவாரண நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

------------------------

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் 15 -ஆவது கல்விப் பேரவைக் குழுக்கூட்டம் 11.05.2021 அன்று இணையம் வழியாக, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் நடைபெற்றது.

------------------------

தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களின் 12-ஆவது நினைவேந்தல் நிகழ்வு 29.06.2021 அன்று, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அன்னாரின் நினைவுக் கல்வெட்டிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், பதிவாளர்(பொ) முனைவர் கு. சின்னப்பன், ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் இரா. ஜெயக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

## மரங்களை வளர்க்கப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முன்னிலையில், கவின்மிகு தஞ்சாவூர் இயக்கத் தலைவர் ராதிகா மைக்கேல், பல்கலைக்கழகப் பதிவாளர் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி, பல்கலைக்கழக வளாகத்திலுள்ள, 6 ஏக்கர் நிலத்தில் மரங்களை நட்டு, தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குத் தண்ணீர் ஊற்றி வளர்த்துப் பராமரிக்கப்படும்.



# மரம் நடும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஜூன் 3 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 98 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் மரம் நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசு வனத்துறை உதவியுடன் உலகச் சுற்றுச் சூழல் நாளான 5.6.2021 அன்று, தமிழ்ப் பல்கலைக்கழகக் குடியிருப்பு வளாகத்தில் தஞ்சாவூர் மாவட்ட வன அலுவலர் இளையராசா அவர்கள் முன்னிலையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களால் மரம் நடும் திட்டம் தொடங்கப்பட்டது. நடப்படும் 400 மரக்கன்றுகளை வளர்த்துப் பராமரித்துத் தன்னளவில் வளரும் வரை, பொறுப்பெடுக்க வனத்துறை முன்வந்துள்ளது.



# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழா

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 131 - ஆவது பிறந்தநாள் விழா 14.04.2021 அன்று, கொண்டாடப்பட்டது. இவ்வினிய நிகழ்வில், தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் பா.ஜெயக்குமார், அண்ணல் அம்பேத்கர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## அறிவியல் தமிழறிஞர் இராம.சுந்தரம் புகழ்வணக்க நினைவேந்தல்



தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும் அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத் தலைவரும் அறிவியல் தமிழறிஞருமான இராம. சுந்தரம் உடல்நலக்குறைவு காரணமாக, காலமானதையொட்டி, பல்கலைக்கழக பேரவைக்கூடத்தில் புகழ் வணக்க நினைவேந்தல் நிகழ்வு, நடைபெற்றது. 1981 - ஆம் ஆண்டு முதல், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வளர்ச்சி இயக்குநராகவும் அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறைப் பேராசிரியராகவும் முதல் துறைத்தலைவராகவும் பணியாற்றியவர். 10 -க்கும் அதிகமான நூல்களை அவர் எழுதியுள்ளார். 35 -க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார். தமிழ், ஆங்கிலம், மலையாளம், போலிஷ் ஆகிய மொழிகளில் ஏறத்தாழ இருநூறு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பல்வேறு அறிவியல் நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ்வழிக் கல்விக்கு வித்திட்ட இவரிடம், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் மருத்துவப் படிப்புகளைத் தமிழில் கற்பிக்கும் பொறுப்பை, முதல் துணைவேந்தரான வ.ஐ. சுப்பிரமணியம் வழங்கினார். பொறியியல் மருத்துவப் படிப்புகளுக்கான பாடநூல்களைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டார். தமிழில் அறிவியல் கலைச்சொல்லாக்க முன்னோடியாகத் திகழ்ந்தார் என, அவரது ஆளுமைத்திறம் குறித்துத் துணைவேந்தர் புகழுரையாற்றினார். முனைவர் சி. தியாகராசன், முனைவர் பெ. இளையாப்பிள்ளை, முனைவர் இரா. காமராசு, முனைவர் தெ. வெற்றிச்செல்வன், முனைவர் செ.த. ஜாக்குலின் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். பல்கலைக்கழகப் பதிவாளர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், புலத்தலைவர்கள், கல்வியாளர்கள், அலுவலர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

## ஆய்வறிஞர் தொ. பரமசிவன் புகழ்வணக்க நினைவேந்தல்



தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆட்சிக்குழு உறுப்பினரும், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவருமான ஆய்வறிஞர் தொ. பரமசிவன் மறைவை ஒட்டி, புகழ் வணக்க நினைவேந்தல் கூட்டம், டிசம்பர் 28 திங்கள்கிழமை அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேசுகையில், பேராசிரியர் தொ. பரமசிவன் தனது ஆய்வு நூல்கள் மூலம் தமிழ்ப் பண்பாட்டையும் வரலாற்றையும் எடுத்துக்காட்டியவர். அறிஞர்கள் தொடர்ந்து அவரைப் பற்றிய பதிவுகளை வெளியிடுவது ஆரோக்கியமான சூழல். இவரது ஆய்வு நூல்கள் பல ஆய்வாளர்களுக்கு உந்துதலாக அமையும். அவரது நூல்கள் மீண்டும் மீண்டும் படிக்கப்பட வேண்டியவை என்றார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் பா. ஜெயக்குமார், இரா. காமராசு, பெ. இளையாப்பிள்ளை, தெ.வெற்றிச்செல்வன் ஆகியோர் புகழ்வணக்க நினைவேந்தல் உரையாற்றினர். கல்வியாளர்களும் அலுவலர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.



# தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் எனும் அறிவுக்கோட்டம்

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், இந்தியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. உலகளவில் தமிழ்மொழிக்கென அமைந்துள்ள இப்பல்கலைக் கழக நூலகத்தில், 1,88,458 நூல்களும், தமிழ் மற்றும் ஆங்கிலம் தொடர்பான 294 காலமுறை இதழ்களும் உள்ளன. நூலகம் தொடங்கிய 1982 - ஆம் ஆண்டிலிருந்து வாங்கப்பெற்ற தமிழ் நாளேடுகளும், இதழ்களும் ஆய்வுப்பயன்பாட்டிற்கு உதவும் வகையில் பாதுகாக்கப் படுகின்றன. பல அரிய, தொன்மையான காலமுறை இதழ்களின் முன்தொகுதிகள் அறிஞர்களால் வழங்கப் பெற்றிருக்கின்றன. நூலகத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள், ஆய்வு மாணவர்கள் மட்டுமின்றி நாட்டின் பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் உள்ள தமிழ் ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடும் தமிழ் அறிஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அறிஞர்கள் பலர், தம் வாழ்நாளில் பயன்படுத்திய நூல்கள், கொடையாகப் பெறப்பட்டு ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் இந்நூலகத்தில் சேகரிக்கப்படுகின்றன. ஞா. தேவநேயப்பாவாணர், திரு. செயவேலு, திரு.ந.மு. வேங்கடசாமிநாட்டார், பேரா. க. வெள்ளைவாரணனார், திருமதி சுப்புலட்சுமி, திரு. எஸ். சுந்தரமூர்த்தி, பேரா. டி. வி. மகாலிங்கம், திரு. தண்டபாணி தேசிகர் ஆகிய அறிஞர்கள் தங்கள் நூல்களை அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றனர். நிறுவனங்களும் வழங்கியிருக்கின்றன. பேரா. கு. நம்பிஆரூரன், திரு. மாதவமேனன், திரு. சாமி. சிதம்பரனார், திரு. சீனிவாச முதலியார், திரு. சந்தான கிருட்டிண முதலியார், திருமதி. ஆரணி சாரதாம்பாள், திரு. அ. வெ. ரா. கிருட்டிணசாமி ரெட்டியார், பேரா. முனைவர். ச. அகத்தியலிங்கம், கௌமார குருகுலம், மன்னார்குடி, திரு. இராமநாதன், சென்னை சகுந்தலா அகாடமி, தஞ்சை சுதர்சன சபா, பேரா. மு. அருணாசலம், திரு. கனகசுந்தரம் பிள்ளை, திரு. எஸ். வி. சகஸ்ரநாமம், பேரா. முனைவர். ஞானகுலேந்திரன், தாமரைத்திரு. த.ஜெயகாந்தன், முனைவர் கே. எஸ். சுப்பிரமணியன், கலைமாமணி மாசிலாமணி, காரைக்குடி ஏ.ஆர். இராமநாதன், பேரா. முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி, சென்னை தரமணி ரோஜா முத்தையா ஆய்வு நூலகம், முனைவர் ஆ. கந்தசாமி, சென்னை, போன்ற தகைமை சான்றோரால் நூற்கொடை கொடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கட்டட அமைப்பில் கட்டப்பட்டுள்ள இந்நூலகத்தில், தமிழ்நாட்டில் உள்ள ஊர்களைப் பற்றி விவரிக்கின்ற வரையறுக்கப்பட்ட நிலப்படங்கள், தமிழக அரசின் ஆணையுடன் பெற்றுப் பராமரிக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, பல நாடுகளின் நிலப்படங்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை சார்பில் 1307 அயலகத்தமிழ் நூல்கள் கொடையளிக்கப்பட்டு, ஆதிகுமணன் நினைவு நூலகம் தனிப்பிரிவாக இயங்கி வருகிறது. மின் நூலாக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன.